கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண் 82, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

**82—**

## வேளாண்மைக் கல்லூரி

***23305—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் கோட்டை வளாகத்தில் காலியாக இருக்கும் நிலத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு பரிசீலிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், குமரி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தேவை என்பது பொது மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும். தமிழகத்தில் அனைத்து இயற்கை வளங்களும் நிறைந்த குமரி மாவட்டத்தில் விவசாய மக்களின் அத்தியாவசியத் தேவையான வேளாண்மைக் கல்லூரியை நடப்பு ஆண்டிலாவது அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2005 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதிதாக ஒரு வேளாண் கல்லூரி துவங்கப்படவேண்டும் என்றால், அரசுக்கு சுமார் ரூ.137 கோடி செலவினம் ஏற்படுகின்றது. அதிலே குறிப்பாக, தொடராச் செலவினம் என்று பார்க்கின்றபோது ரூ.111 கோடியும், தொடரும் செலவினம் என்று பார்க்கின்றபோது ரூ.26 கோடியும் சேர்த்து, மொத்தம் ரூ.137 கோடி புதிதாக ஒரு வேளாண் கல்லூரி துவங்கப்படவேண்டுமென்றால் அரசுக்குத் தேவைப்படுகின்றது. மேலும், ஒரு வேளாண் கல்லூரி துவங்குவதற்கு சுமார் 500 ஏக்கர் நிலமும், அதற்குக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நிலம், அடிப்படை வசதிகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்காக இந்த ரூ.137 கோடி தேவைப்படுவதால், தற்போது அரசினுடைய பரிசீலனையில் அதுபோன்ற ஒரு எண்ணம் இல்லையென்பதையும், அதே நேரத்திலே--மாணவ, மாணவியர்கள் மத்தியிலே—தற்போது தமிழகத்திலே இருக்கின்ற வேளாண் கல்லூரிகளிலே போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் சேரவில்லை என்பதையும் இந்த நேரத்திலே உங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே கேள்வியை 1980 ஆம் வருடத்தில் இந்த மாமன்றத்திலே கிளப்பி, அப்போது, இது பரிசீலனை செய்யப்படும் என்று ஒரு பதிலைத் தந்தார்கள். ஆனால், இன்றைய நிலையில் அதிக நிதி செலவாகும் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, அதுபோன்று இருக்கின்ற கல்லூரிகளில் போதுமான சேர்க்கை இல்லாத நிலை இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆனால், இந்த மாவட்டத்தினுடைய பல்வேறுவிதமான விவசாயப் பொருள்கள், குறிப்பாக, இரப்பரானாலும் சரி, நெல்லானாலும் சரி, வாழையானாலும் சரி, இப்பயிர்களை அதிகமாகப் பயிர் ஏற்றுகின்ற ஒரு காரணத்தால் அரசுக்கு சற்று அதிகச் செலவினம் ஏற்பட்டாலும், பெருவாரியான மாணவர்கள் பிற மாவட்டங்களுக்குச் செல்லவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஒரு வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

[2005 மார்ச் 7

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகம் முழுவதும் 10 வேளாண் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக--மேலும் ஒரு பட்டயப் படிப்பு நிலையம், அதேபோன்று ஆதிபராசக்தி—தனியாருடைய வேளாண் கல்லூரியும் தற்போது தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றது. அதிலே ஒரு வருடத்திற்கு, அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டிலே 613 மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும். ஆனால், இந்த நிதியாண்டிலே 613 மாணவ, மாணவியர்களுக்குப் பதிலாக, 573 மாணவ, மாணவியர்கள்தான் சேர்ந்து இருக்கின்றார்கள் என்பதையும் குறிப்பாக நாம் பார்க்கின்றபோது, நான்கு ஆண்டுகளிலே சேர்க்கப்பட வேண்டிய மாணவ, மாணவியர்களுடைய எண்ணிக்கை 2,543. ஆனால், 4 ஆண்டுகளிலே சேர்ந்து இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் எண்ணிக்கையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 2,007 தான் சேர்ந்து இருக்கின்றார்கள் என்பதையும், அந்த அடிப்படையிலே மாணவ, மாணவியர்கள் தற்போது வேளாண்மைக் கல்லூரிகளிலே சேர்வதற்கு ஆர்வம் காட்டவில்லை என்பதையும், குறிப்பாக, தற்போது ஏழாயிரம் மாணவ, மாணவிகளுக்கு மேலாக வேளாண் பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்றார்கள் என்பதையும், பொது நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் தற்போது வேளாண் பட்டதாரிகளுக்கு உரிய வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தாலே மாணவ, மாணவிகள் மத்தியிலே வேளாண் கல்லூரிகளிலே சேர்ந்து படிக்கின்ற ஆர்வம் குறைந்து வருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே சுமார் 137 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு புதிய வேளாண்மைக் கல்லூரி துவங்குவது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 83, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.